செய்தி வெளியீடு எண்: 572 நாள்:05.09.2019

**அமெரிக்க நாட்டின் சான் ஹீசே நகரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் முதலீட்டாளர்கள் கூட்டம்**

அமெரிக்க நாட்டிலுள்ள தொழில் முனைவோரிடம் இருந்தும், அமெரிக்க வாழ் தமிழ் முதலீட்டாளர்களிடம் இருந்தும், முதலீடுகளைப் பெற்று தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து எடுத்துச் செல்ல, அமெரிக்க நாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்கள். நியூயார்க் நகரில் 3.9.2019 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் கூட்டத்தில் மட்டும் 16 நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்து இட்டன. இதன் மூலம், தமிழ்நாட்டில் 2,780 கோடி ரூபாய் முதலீடும், 20,000க்கும் மேற்பட்ட புதிய வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக அமெரிக்க நாட்டின், சான் ஹீசே நகரில் 4.9.2019 அன்றும் ஒரு முதலீட்டாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று, தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்படும் என உறுதியளித்தார்கள். இக்கூட்டத்தில் 250க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் கலந்து கொண்டனர். ஏற்கனவே தமிழ்நாட்டில் முதலீடு செய்து, வெற்றிகரமாக தொழில் நடத்தி வரும் அமெரிக்க நிறுவனங்களான Foxconn, Lincoln Electric மற்றும் Zoho Corporation–ஐ சேர்ந்த உயர்அலுவலர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள வசதிகள் பற்றியும், தங்களின் சிறப்பான அனுபவங்களைப் பற்றியும், எடுத்துரைத்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள சிறந்த உட்கட்டமைப்பு, திறன் மிக்க மனிதவளம், தடையில்லா மின்சாரம், தொழில் நடத்த உகந்த அமைதியான சூழல், விரைவான அரசு அனுமதிகள் ஆகியவற்றை விளக்கும் காட்சித் தொகுப்பும் திரையிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில், முதலீட்டிற்கு ஏற்ற சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்பதனை வலியுறுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும், முதலீட்டிற்கு அளித்து வரும் ஊக்க உதவிகளையும் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மேலும், வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களும், நிதி சார்ந்த தொழில் நுட்ப முதலீடுகளுக்கும் (Finetech), வானூர்தி (Aerospace), விண்வெளி (Space) தொழில் நுட்பங்களைப்

பயன்படுத்தும் நிறுவனங்களுக்கும், மின்சார வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் உகந்த மாநிலம் தமிழ்நாடு என்பதனை வலியுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, Lincoln Electric, Wearable Mems, Caldon Biotech, ZL Technologies, Kapisoft, Kloud Learn, Sierra Health Alerts, Acts Global Tech Solutions, Ripe.io, Latent.ao, Achireum, Nature Mills, SAi, ACS Global Tech Solutions, Dotsolved Systems, Inc ஆகிய தொழில் நிறுவனங்களும், TIE Global, USISPF, Google X, DCF Ventures ஆகிய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களும் சுமார் 2,300 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தொழில் துவங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்து இட்டனர்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள தொழில் முனைவோருக்கு தேவையான உதவிகள் அளிக்க Digital Accelerator என்ற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அமெரிக்க தொழில் முனைவோர் (ATEA) என்ற அமைப்பின் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள இந்த Digital Accelerator திட்டத்தின் மூலம் நிதியுதவி பெறவுள்ள தமிழ்நாட்டு தொழில் முனைவோருக்கு அவர்கள் தொடங்கும் புதுத்தொழிலுக்கு தேவையான நிதியில் 10 சதவீதத்தை தமிழ்நாடு அரசு வழங்கும் எனவும், அதற்கென 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த முதலீட்டாளர்கள் கூட்டத்தினை தொடர்ந்து ‘‘யாதும் ஊரே’’ திட்டக் கூட்டத்தினை சான் ஹீசே நகரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். இக்கூட்டத்தில் கலிஃபோர்னியா மாகாணம் மற்றும் மேற்கு அமெரிக்க பகுதிகளைச் சேர்ந்த தமிழ் அமைப்புகள் கலந்து கொண்டன. தமிழர்களை ஒருங்கிணைக்கும் இந்த அரிய முயற்சியான ‘‘யாதும் ஊரே’’ திட்டத்தை தமிழ் அமைப்புகள் வெகுவாக பாராட்டின.

இன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் மொத்தம் 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, சுமார் 2,300 கோடி ரூபாய் முதலீடு தமிழ்நாட்டிற்கு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,500க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். இது ஒரு அருமையான துவக்கம் மட்டுமே என்றும், வருங்காலங்களில் இம்முயற்சிகள் மேலும், விரிவாக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் தொலை நோக்குப் பார்வையில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் அனைத்தும் எட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக கூறினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**